**கவனிக்க.-** *2015.05.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1918 - 2015 ජූනි මස 05 වැනි සිකුරාදා - 2015.06.05

*1918 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 870 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 872 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 873 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 879 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

விலைமனுக் கோரல்

Procurement for the Supply of 150 Nos. Led Street Light Fixture & Accessories to be used in Railway yard Lighting

Procurement No. : SRS/F.7173

இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், இலங்கைப் புகையிரத சேவைகள், பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளர், Led Street Light Fixture & Accessories இன் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்கள் 2015.07.15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 250 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் 2015.07.14 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் மேலேயுள்ள முகவரியில் முடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மேலேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம்.

5. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2473328, 2436818.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்னஞ்சல் இல. : srs.slr@gmail. com
இணையத்தளம் : www.railwary.gov.lk

தவிசாளர்,
பிராந்திய பெறுகைக் குழு,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல. SRS/F.7173

6-168

---

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2015***

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2015.06.15 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | கம்பஹா-மினுவான்கொட (பிம்சவிய) | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | கம்பஹா நகருக்கு அருகாமையில் | 2015.07.21 |

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | டோம்பே-பியகம மினுவான்கொட (பிம்சவிய) | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | கிரிந்திவெல நகருக்கு அருகாமையில் | 2015.07.01 |
| வட மாகாணம் | வவுனியா | வவுனியா | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), இல. 9, யாழ்ப்பாண வீதி, வவுனியா | வவுனியா நகருக்கு அருகாமையில் | 2015.06.15 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல்" - (இடத்தின் பெயர்) எனக் குறிப்பிட்டு 2015.06.15 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05,*
*2015, மே 15.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

***பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2015***

***கட்டிட உரிமையாளர் தொடர்பாக-***

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

***கட்டிடம் தொடர்பாக-***

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கையும் :----.

6. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.

7. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.

8. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.

9. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.

10. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.

11. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.

12. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

6-18

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2015/2016

2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:

"........................................... இலக்கமுள்ள ........................................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

எனக் குறிப்பிட்டு 2015.06.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.

5. 2015.06.15 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2015.06.22 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

ரங்கன பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2015, மே 18.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட் இலக்கம் 2 | ஈச்சம்பிடிய | 2015.06.15 மு. ப. 10.30 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட் இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2015.06.15 மு.ப. 10.30 | 1,000 |
| 3. | பிடிகல கோரலே | ஒலிதலுவ | 2015.06.15 மு. ப. 10.30 | 250 |

6-51

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பலாங்கொடை, 'ருக்செவன', ஹொரகெட்டியேவில் வதியும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 683570664V கொண்ட ஹொட்டிஹெலே நந்தன ஜயன்த ஹெட்டி ஆராச்சி ஆகிய என்னால், ருவைஸஸ் 2, 4606 டெல்ஹெம், பெல்ஜியமில் வதியும் ஹில்டெகாட் ரொஸலின்ட மென்சல் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மற்றும் சட்டத்தரணி ரூபசேன கொஸ்வத்த அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 2008.05.13 ஆந் திகதிய 2361 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவம் 2015.05.18 ஆந் திகதி தொடக்கம் நான் இரத்துச் செய்கின்றேன். இதன் பின்னர் மேலே அற்றோணித் தத்துவம் மீது செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் வகை கூறமாட்டேன் என அனைவருக்கும் அறிந்துகொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஹொட்டிஹெலே நந்தன ஜயன்த ஹெட்டி ஆராச்சி.

6-89

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, பிட்டிபன வடக்கு பாடசாலைச் சந்தி, இலக்கம் 113/2 இல் வசிக்கும் சிரோமா சந்தனி மாதாகே (அடையாள அட்டை இலக்கம் 706361979V) ஆகிய நான், அவிசாவளை பிரபல வழக்கறிஞர் என். எம். யசோதரா ஜயம்பதி சோமதாச என்பவரால் பதிவுசெய்யப்பட்ட 2014, ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய இலக்கம் 18 எனும் அற்றோணி தத்துவப்பத்திரத்தை மல்லேவ மோறாஹேன கங்கொட வீதி, இலக்கம் 430/10பி எனும் இடத்தில் வசிக்கும் பனாப்பகே ஜனக்க (அடையாள அட்டை இலக்கம் 780703857V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 148 ஆவது பகுதி 36 ஆம் பத்திருவ 5681 ஆம் புத்தக இலக்கத்தில் 2014.09.19 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட இந்த அற்றோணித் தத்துவம் 2015.05.09 ஆந் திகதியுடன் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மற்றும் இந்த அற்றோணி அதிகாரம் கொண்டவ ரான பானாகே ஜனக்க என்பவரால் புரியப்படும் காரியங்களுக்கு நான் பொறுப்பு கூற மாட்டேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

சிரோமா சந்தனி மாதாகே.

6-07

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது,

இல. 5, பன்சலை வீதி, களுவெல்லை, காலி எனும் இடத்தில் வசித்து தற்போது எம். எல். பீட்ஜ் 4521706 டொடர்சன், ஜெர்மனி எனும் இடத்தில் வதியும் தேவிகா சமந்தி, ஷலிக்கின் உடனான திருமணத்திற்கு முன்னதாக தேவிகா சமந்தி விஜேசேகர ஆகிய என்னால், இல. 509, ஹிரிம்புர வீதி, கஹதுவத்த காலியில் வதியும் கிங்ஸ்லி தஹநாயக்க என்பவருக்கு அதிகாரமளிக்கப்பட்ட, தென் வலய பதிவாளர் நாயக அலுவலகத்தில் அற்றோணித் தத்துவப் புத்தக இல. 41 ஆம் பகுதியில் 72 ஆம் இலக்கப் பக்கத்தில், 369 ஆம் தொடர் இலக்கத்தின்கீழ் பதியப்பட்ட 2012.08.02 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து அதிகாரமிழக்கச் செய்கிறேன்.

இன்று முதல் கிங்ஸ்லி தஹநாயக்க என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை சம்பந்தமாகவும், உள்ளடக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் இதன் மூலம் அறியத்தருகிறேன்.

தேவிகா சமந்தி.

6-48

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வென்னப்புவ, கெலிஞ்சாடிய கிழக்கு, இல. 99ஏ எனும் முகவரியைச் சேர்ந்த கிரிவெல்லகே டோன ஜீன் சந்திரிகா சுதர்ஷனி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு டென்சில் பொன்சேகா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 36124 எனும் இலக்க 2012.05.15 ஆந் திகதிய வென்னப்புவ, கெலிஞ்சாடிய வடக்கு, 87டி எனும் இலக்கத்தைச் சேர்ந்த கிரிவெல்லகே டோன துஷாரி நிம்மிக ஹாமி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இல்லாதொழித்து இரத்துச்செய்துள்ளேன்.

கிரிவெல்லகே டோன ஜீன் சந்திரிகா சுதர்ஷனி.

6-19

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 17/18, அனகாரிக தர்மபால மாவத்தை, மெதகொட, மாத்தறையில் வதியும் ரூபசிங்க ஆரச்சிலாகே உபுல் (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 781634140V) ஆகிய என்னால் 2012.12.07 ஆந் திகதி பள்ளி முல்ல, மாத்தறையில் வதியும் இல. 1, கிணற்று வீதி, பள்ளே முல்ல, மாத்தறையில் வதியும் தேநுவர ஹென்னதிகே சமன் இந்திக என்பவருக்கு அதிகாரம் வழங்கும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. என். பிரனாந்து அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட 1802 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் 2015.02.11 ஆந் திகதி முதல் இரத்துச்செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ரூபசிங்க ஆரச்சிலாகே உபுல்.

6-16

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இலக்கம் 74, கொழும்பு மாவட்டம், முல்லேரியா உடுமுல்ல என்ற முகவரியில் வசிக்கும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ஜீ 03227712V) குருவிட்டகே சரத் திலகாநந்த ஆகிய என்னால் அற்றோணி தத்துவப்பத்திரம் மூலம் நியமிக்கப்பட்ட 22/6, ஹோஹாந்திர வடக்கு ஹோஹாந்திர எனும் முகவரியில் வசிக்கும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 4555815321V) கொண்ட தோன பத்மா பத்மபொரும என்பவருக்கு வழங்கப்பட்ட, பிரசித்த நொத்தாரிசு ஞானசிறி என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 6339 ஆம் இலக்கம் கொண்டதும் 1998.11.01 ஆந் திகதியில் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

குருவிட்ட சரத் திலகாநந்த.

6-49

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தலங்கம தெற்கு, கொஸ்வத்த, இலக்கம் 369பி, பைப் வீதியைச் சேர்ந்த சேபால ஏக்கநாயக்க ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். கே. ஹெட்டிகே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஹெட்டி ஆராச்சிகே நிமலசிறி என்பவருக்கு வழங்கிய 559 ஆம் இலக்க 2013.09.18 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவம் என்னால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். ஆகையால் இன்று தொடக்கம் கூறப்பட்ட ஹெட்டிஆராச்சிகே நிமலசிறி என்பவரினால் எனது சார்பில் செய்யப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

சேபால ஏக்கநாயக்க.

6-178

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பீட்டர் கிட்மண் (PETER GIDMAN) ஆகிய என்னால், அம்ஸ்ரடாம், நெதர்லாந்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு Renate-Ingeborg Georgette Henrica Maria Van den Boogaard-Brouwers (Candidate Notary Deputy of the Office of Denis Henricus Wilhelmus Melgers) அவர்களால் 2013, செத்தெம்பர் மாதம் 6 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட யத்தெஹிமுள்ள வீதி, உனவட்டுன லோட்டஸ் ஹவுஸ், தற்போது காலி ரூமஸ்ஸல போனாவிஸ்டாவைச் சேர்ந்த தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 713547085V ஐக் கொண்ட விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஸ்ரீ சந்திரலால் ரணசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ உரிமையை இரத்துச்செய்து இல்லாதாக்குவதோடு, சொல்லப்பட்ட விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஸ்ரீ சந்திரலால் ரணசிங்க எனது சார்பில் செய்யும் அல்லது செய்ததாகக் கருதப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பீட்டன் கிட்மண் (PETER GIDMAN).

6-201

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பீட்டர் கிட்மண் (PETER GIDMAN) ஆகிய என்னால், அம்ஸ்ரடாம், நெதர்லாந்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு Dennis Hendricus Wilhelmus Melgers அவர்களால் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு யத்தெஹிமுள்ள வீதி, உனவட்டுன லோட்டஸ் ஹவுஸ், தற்போது காலி ரூமஸ்ஸல போனாவிஸ்டாவைச் சேர்ந்த தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 633541655V ஐக் கொண்ட விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஸ்ரீ சந்திரலால் ரணசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ உரிமையை இரத்துச்செய்து இல்லாதாக்குவதோடு, சொல்லப்பட்ட விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஸ்ரீ சந்திரலால் ரணசிங்க எனது சார்பில் செய்யும் அல்லது செய்ததாகக் கருதப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பீட்டன் கிட்மண் (PETER GIDMAN).

6-202

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பீட்டர் கிட்மண் (PETER GIDMAN) ஆகிய என்னால், அம்ஸ்ரடாம், நெதர்லாந்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு Krijn Bernardus Blijleven அவர்களால் 2012, ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு யத்தெஹிமுள்ள வீதி, உனவட்டுன லோட்டஸ் ஹவுஸ், தற்போது காலி ரூமஸ்ஸல போனாவிஸ்டாவைச் சேர்ந்த தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 633541655V ஐக் கொண்ட

விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஶ்ரீ சந்திரலால் ரணசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ உரிமையை இரத்துச்செய்து இல்லாதாக்குவதோடு, சொல்லப்பட்ட விக்ரமசிங்க ஆராச்சிகே தர்மஶ்ரீ சந்திரலால் ரணசிங்க எனது சார்பில் செய்யும் அல்லது செய்ததாகக் கருதப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பீட்டன் கிட்மண் (PETER GIDMAN).

6-203

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இஸ்ரேல், Tel Avaiv, Havot Alivavot 32 ஆம் இலக்கத்தில் வதியும் ராஜனி பிச்சை (பிச்சை ராஜனி) (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 707881852X) என்பவருக்காக இஸ்ரேலிலுள்ள தூதுவர் எஸ். திசாநாயக்கவினால் இஸ்ரேல் தூதுவர் அலுவலகத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு மேலதிக உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் அற்றோணித் தத்துவ 37 ஆம் தொகுதி, 91 ஆம் பக்க, 19082 ஆம் நாட்புத்தக இலக்கத்தின்கீழ் 2013.10.30 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு கப்புராரச்சிகே தினேஷ் இந்திக்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் வெறிதாக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் பிரகடனப்படுத்தும் அதே வேளையில் இதன் பின்னர் அற்றோணித் தத்துவதாரரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயல்பாடு, அதிகாரம், உறுதி அல்லது ஏனைய ஆவணங்களுக்கு அற்றோணித் தத்துவம் வழங்கிய நான், பொறுப்பேற்க மாட்டேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜனி பிச்சை.

6-213

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்குணகொலபெலஸ்ஸ, அலுத்வெவ, இல. 2/377 இல் வதியும் தமிந்தகுமார அபேவிக்ரம (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 833184484V) ஆகிய என்னால் அம்பலாந்தோட்டை வளவில் வதியும் இமதுவ ஹேவாகே அஜித் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 711691413V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2012.07.02 ஆந் திகதி சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி நிராஷி கிஷ்யா பிரியந்தி விஜேசூரியவினால் 2786 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணித் தத்துவம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் இல்லாதொழித்து இரத்துச்செய்யப்படுகிறது எனவும், கூறப்பட்ட இமதுவ ஹேவாகே அஜித், தமிந்த குமார அபேவிக்ரம என்பவர்கள் இனிமேல் அற்றோணி தத்துவதாரர்கள் அல்ல என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதுடன் கூறப்பட்ட அற்றோணித் தத்துவகாரர் மூலம் செய்யப்படும் எந்தவொரு செயற்பாடும் தமிந்தகுமார அபேவிக்ரம ஆகியவர் சார்பாக செய்யப்படும் செயற்பாடு அல்ல எனவும் மேலும் அறியத்தருகின்றேன்.

தமிந்த குமார அபேவிக்ரம.

6-73

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், ஏஜரீ ஜப்பான் லங்கா ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

பதிவு இலக்கம் : பீவீ 105220
பதிவு அலுவலகம் : இல. 282/2ஈ, பைப் வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்லை

6-175

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சுபர் லேன்ட்ஸ் ப்ரொபர்டி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 104832
கூட்டிணைப்புத் திகதி : 2015.03.30
பதிவு முகவரி : இல. 567டி, மிஹிந்து மாவத்தை, மாலபே

பணிப்பாளர்.

6-212

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : யுனிஸ்டார் ஃப்ரெய்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 61956
பதிவுத் திகதி : 26.04.2011
பதிவு விலாசம் : இல. 4, மொடல் ஹவுஸஸ், புளூமென்டல் பிளட்ஸ், கொழும்பு 13
கம்பனியின் புதிய பெயர் : பிரிமியர் லொஜிஸ்டிக்ஸ் அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ட்ஸ்
அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 5/6, பொலிஸ் பார்க் டெரஸ்,
கொழும்பு 5.

6-149

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஏஜீ றிசோசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105553
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 12.05.2015
பதிவு அலுவலகம் : இல. 42ஏ, வோல்ரர் குணசேகர மாவத்தை, நாவலை

பினான்சியெல் அன்ட் பிசினெஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-152

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எபெக்ஸ் அவுரா ஜஎன்டீ (பீவீரி) எல்ரீடி
பதிவு இலக்கம் : பீவீ 98914
கூட்டிணைப்புத் திகதி : 2014.06.09
பதிவு முகவரி : இல. 282/4, பைப்ப வீதி, தலங்கம, பத்தரமுல்லை

கம்பனிப் பணிப்பாளர்கள்.

6-43

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த டெய்லி ரிமைன்டர் நெட்வேர்க் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 105375
பதிவு முகவரி : இல. 372/19/பி/1, பேராதெனிய வீதி, கண்டி

6-61

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நைட்ஸ் பிரிட்ஜ் பிபீஓ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105437
பதிவு முகவரி : இல. 26ஏ, ஜெயா வீதி, கொழும்பு 4
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 06.05.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-84

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நைட்ஸ் பிரிட்ஜ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105289
பதிவு முகவரி : இல. 26ஏ, ஜெயா வீதி, கொழும்பு 4
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 28.04.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-83

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நைட்ஸ் பிரிட்ஜ் ஈகொமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105433
பதிவு முகவரி : இல. 26ஏ, ஜெயா வீதி, கொழும்பு 4
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 06.05.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-82

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நைட்ஸ் பிரிட்ஜ் மார்க்கெட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 105431

*பதிவு முகவரி* : இல. 26ஏ, ஜெயா வீதி, கொழும்பு 4
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 06.05.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-81

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நைட்ஸ் பிரிட்ஜ் டெக்னோலஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 105443
*பதிவு முகவரி* : இல. 26ஏ, ஜெயா வீதி, கொழும்பு 4
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 06.05.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-85

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : தனேஷ் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 102554
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.12.03
*பதிவு முகவரி* : இல. 100பி 1/1, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 7

சார்ட் பிசினஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.

6-76

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிரேபோன் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100079
*கூட்டிணைப்புத் திகதி* : 05.08.2014
*பதிவு முகவரி* : இல. 71/ஏ, அம்பில்ல வத்த வீதி, பொரலஸ்கமுவ

சார்ட் பிசினஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.

6-77

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் (8 ஆம் பிரிவில்), பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : எவர்கிரீன் ஹொடெல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 74280
*கூட்டிணைப்புத் திகதி* : 16.08.2013
*பதிவு முகவரி* : இல. 38ஏ, இஹலகம, கம்பஹா
*கம்பனியின் புதிய பெயர்* : சில்க் றோட் இம்போர்ட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

சார்ட் பிசினஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.

6-78

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ரஜமலே ஃபார்ம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 104225
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 156-1/4, ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு 12

கம்பனிச் செயலாளர்.

6-93

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சென்ரா ஈகோ புரொடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105051
கம்பனியின் முகவரி : மலாவ, குருவிட்ட

பணிப்பாளர்.

6-117

---

## அறிவித்தல்

ப்ரஸ்டீஜ் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ப்ரஸ்டீஜ் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிடெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2015, மே மாதம் 6 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இல. பீவீ 105439 என்றும் அதன் பதிவு அலுவலகம் இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்று இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

எம் அன்ட் ஏ கம்பனி செக்கரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

6-188

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சென்ரா ஈகோ மார்க்கெட்டிங் அன்ட் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 104774
கம்பனியின் முகவரி : மலாவ, குருவிட்ட

பணிப்பாளர்.

6-116

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஆர்ட் மூவிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 105191
கம்பனியின் முகவரி : எம் அன்ட் எம் சென்றர், 2 ஆம் மாடி, இல. 34/5, கோட்டே வீதி, இராஜகிரிய

பணிப்பாளர்.

6-118

---

## கம்பனியின் இறுதிப் பொதுக் கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் இறுதிப் பொதுக் கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அறையில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது ;
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை ; மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம மற்றும் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள் -
இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்.

2015, வைகாசி 19.

6-98

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்களும் இயந்திர சாதனங்களும் பகிரங்க ஏல விற்பனை**

***955 மற்றும் 4543 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

*வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டம், தம்மன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவு, மெதபத்து, 175-3 அலைவரிசை, பளுகஸ்தமன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட F. C. P. Po. 20 ஆம் இலக்க வரை படத்தில் துண்டு 256 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.*

*(காணியின் விஸ்தீரணம் : 04ஏ. 02றூ. 08பே.)*

*அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு அமைய குறித்த காணி பின்வருமாறு விபரிக்கப்படுகிறது :*

